★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 4உ வியாழன் (17—5—56) ★ ★ வெளியீடு: வைகாசி 5உ வெள்ளி (18—5—56) [இதழ் 287

கராச்சி-அங்காரா இரயில் பாதை!

கராச்சி, மே 16—

கராச்சியையும், துருக்கியிலுள்ள அங்காராவையும் இணைக்கும் இரயில் பாதை போடுவதுபற்றிய பேச்சுவார்த்தைகள் இன்று தொடங்கப்பட்டு விட்டதாம்!

பாக்தாத் ஒப்பந்தத்தை யொட்டியே இவ்வாலோசனை நடைபெறுகிறதாம். கராச்சியிலிருந்து—தெஹ்ரானுக்கும், பாக்தாத்துக்கும்—அங்காராவுக்கும் இரயில் பாதை போடப்படுமாம்! ஏற்கனவே கராச்சிக்கும் ஈரானிலுள்ள ஜாஹிதானுக்கும் இரயில் பாதை போடப்பட்டுவிட்டது.

வரலாறு காணாத மாநில மாநாட்டு ஊர்வலம்

ஒன்றரை இலட்சம் மக்கள் கலந்துகொண்டனர்

அதிர் வேட்டு-வாழ்த்தொலிகளுடன் தலைவர்கள் 'பவனி'

தொண்டர் படையினர் அணிவகுப்பு ஊர்வலத்திற்கு அணி செய்தது

திருச்சி வீதிகள் தோறும் இலட்சிய முழக்கம்

பார்க்குமிடமெல்லாம் கழகக் கொடிகள் ஒளி விசிப் பறந்தன

மாநாட்டு வாயிலில் தலைவரை அண்ணா, சம்பத் வரவேற்ற உருக்கமிக்க காட்சி

('டிரங்' டெலிபோன் மூலம் - நமது தனி நிருபர்)

திருச்சி மே, 17—

திருச்சியில் தி. மு. கழக 2-வது மாநில மாநாடு இன்று தொடங்கியது. காலையிலிருந்தே திருச்சி பெரும் பரபரப்புடன் காணப்பட்டது. காலை 6 மணியிலிருந்தே ஊர்வலம் புறப்படும் இடமாகிய சிந்தாமணியில் கூட்டம் கூட்டமாய் மக்கள் குழுமிய வண்ணம் இருந்தனர். 8-மணிக்கெல்லாம் சிந்தாமணிப் பகுதியில் நெருக்கம் மிகுந்துவிட்டது. மக்களிடையே ஊர்வலத்தைப்பற்றிய பேச்சும், பரபரப்பும் உலவிவந்தன.

சரியாக 10-30 மணிக்கு ஊர்வலம் சிந்தாமணியைவிட்டுப் புறப்பட்டது. பொதுச்செயலாளரும், மாநாட்டுத் தலைவருமான இரா. நெடுஞ்செழியன் சாரட் வண்டியில் அமர்ந்திருந்தார். அவருடன் துணைப் பொதுச்செயலாளரும், மாநாட்டுக் கண்காட்சியைத் திறந்து வைப்பவருமான தோழர் என். வி. நடராசன் அவர்களும், மாநாட்டுத் திறப்பாளரான தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களும், வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் அ. பெ. தருமலிங்கமும் அமர்ந்திருந்தனர்.

கழக முன்னணி வீரர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். நெல்லை, கோவை, திருச்சி, சேலம், இராமநாதபுரம், தென்னார்காடு, வடாற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை, சென்னை, மதுரை, நீலகிரி, சித்தூர், நாஞ்சில், புதுவை, பெங்களூர், மலபார், இலங்கை, பம்பாய் முதலிய மாவட்டங்களிலிருந்து 1,500-க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். மற்றும் கழக உறுப்பினர்கள் ஏறக்குறைய 50,000 பேரும், பொது மக்கள் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேருமாக சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் புறப்படுவதற்கு முன்னர் அதிர்வேட்டுக்கள் முழங்கின. நன்கு அலங்கரிக்கப்பட்ட யானை, ஊர்வலத்தின் முன்னால் அழகுநடை போட்டுச் சென்றது.

ஊர்வலம் புறப்படுவதற்கு முன்னர் மக்கள் அனைவரும் அணிவகுத்து நின்று மாநாட்டுத் தலைவரையும், அறிஞர் அண்ணா அவர்களையும் வாழ்த்திப் பேரொலிகள் எழுப்பினர். ஊர்வலம் புறப்பட்டதும் மக்கள் அனைவரும் வாழ்த்தொலிகளும், கழகத்தின் குறிக்கோளுரைகளையும் எழுப்பியவண்ணம் இருந்தனர்.

தொண்டர்ப் படைத் தலைவர் தோழர் ஐ. எம். ஷரீப் அவர்கள் குதிரையின்மீது அமர்ந்து ஊர்வலத்தை நடத்திச் சென்றது ஊர்வலத்திற்கு அணி செய்வதாயிருந்தது.

தொண்டர்ப் படையினர், ஊர்வலம் சிறந்த முறையில் செல்வதற்குப் பெரிதும் முயற்சி செய்தது பாராட்டுதற்குரியது.

இந்த மாபெரும் ஊர்வலம் சிந்தாமணியைவிட்டுப் புறப்பட்டு, சின்னசாமி சத்திரரோடு, மேலப்புலிவார்டு ரோடு, பாலக்கரை ரோடு, மேலப்புதூர் ரோடு முதலியவற்றின் வழியாக மிகச் சிறப்பான முறையில் சென்றது.

ஊர்வலத்தில் கலந்துகொண்ட கன்னட உறுப்பினர்கள் கன்னடத்திலும், மலையாள உறுப்பினர்கள் மலையாளத்திலும் வாழ்த்தொலிகளையும், இலட்சிய கீதங்களையும், எழுப்பினமை மாற்றார் கவனத்தை ஈர்த்தது எனின் மிகையாகாது.

ஊர்வலம் சென்ற வழிகளிலெல்லாம் நமது கழகக் கொடிகள் ஆயிரக் கணக்கில் வானத்தை அளாவிப் பறந்தன. ஆங்காங்கே கட்டப்பட்டிருந்த தோரணங்களும், கொடிகளும் வீதிகளை அழகு செய்தன. நமது இயக்கக் கொள்கைகளைத் தாங்கிய வளைவுகளும், தலைவர்களை வாழ்த்தும் உரைகளைத் தாங்கிய வளைவுகளும் நூற்றுக் கணக்கில் வழிநெடுக அமைக்கப்பட்டிருந்தன.

ஊர்வலம் சென்ற வீதிகளின் இருமருங்கும் மகளிரும், ஆடவரும் இலட்சக் கணக்கில் கூடி ஊர்வலத்தின் சிறப்பைக் கண்டுகளித்தனர்.

வாழ்த்தொலிகளும், இயக்கத்தின் இலட்சியக் கீதங்களும் அவர்கள் செவிக்கு நல்லுணவாயின என்பது அவர்களின் மலர்ச்சியடைந்த முகங்களைக்கொண்டே இயம்பி விடலாம்.

ஆர்வத்தோடு ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் வாழ்த்தொலிகள் எழுப்புவதற்கிடையே மாநாட்டின் சிறப்புப் பற்றியும், ஊர்வலத்தின் சிறப்புப் பற்றியும், மாநாட்டுப் பந்தல் அமைப்பின் அழகு பற்றியும் பேசிக்கொண்டே சென்றனர்.

எங்குப் பார்த்தாலும் வாழ்த்தொலி! எப்பக்கம் திரும்பினும் மலர்ந்த முகம்! எங்கு நோக்கினும் ஆர்வம்! எப்பக்கம் செவிசாய்ப்பினும் வாழ்த்தொலிகள்! இவை மாற்றார் உள்ளத்தையும் மாற்ற வல்ல காட்சிகள் எனின் மறுப்பார் யாவரேயுளர்?

தமிழகம் காணாத மாபெரும் ஊர்வலம்! திருச்சியின் வரலாற்றிலே—ஏன் திராவிடத்தின் வரலாற்றிலே இத்தகையதோர் ஊர்வலம் இதுகாறும் நடைபெற்றதில்லை.

ஊர்வலம் மிக வெற்றியோடு, குதூகலத்தோடு மாநாடு நடைபெறும் வள்ளுவர் நகரை அணுகியதும் நம் கழகக் காவலரும், பெருந்தகையுமான அறிஞர் அண்ணா அவர்களும், நமது கொங்குநாட்டுச் செல்வமாம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும், மாநாட்டுத் தலைவர் இரா. நெடுஞ்செழியனையும், மற்றவர்களையும் வரவேற்றக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

அப்போது, தொண்டர்களும் மற்றவர்களும் எழுப்பிய வாழ்த்தொலிகள் ஊர்வலத்திற்கே மணிமுடி சூட்டியது போன்றிருந்தன. அக் காட்சியைக் காணாத கண்களும் கண்களோ? அவ்வாழ்த்தொலியைக் கேளாத செவிகளும் செவிகளோ? எனக் கேட்கத் தோன்றும் ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்கட்கு!

மாநாட்டுப் பந்தலை ஊர்வலம் பகல் ஒன்றரை மணியளவில் அடைந்ததும், சுமார் 500 தொண்டர்கள் மாநாட்டுத் தலைவருக்கு அணிவகுப்பு மரியாதை செய்தனர்.

பின்னர் தலைவரும், மற்றவர்களும், வள்ளுவர் நகரை அழகுறச் செய்யும் பந்தலை அடைந்தனர்.

கொடியேற்றல்

மாநாட்டுத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நம் கழகக் கொடியைப் பெரும் ஆரவாரத்திற்கும், வாழ்த்தொலிக்கும் இடையே ஏற்றி வைத்தார்.

(முழு விவரங்களும் நாளை வெளிவரும்)

குற்றம் புரிந்தோர் அனைவருக்கும் தண்டனை!

புதுடில்லி, மே 16—

'குற்றம் புரியும் அனைவருக்கும்—சிறுவர்கள் உட்பட—தண்டனை கொடுப்பதற்கேற்ற ஒரு சட்டத்தை உருவாக்க இந்திய அரசாங்கம் சிந்தித்து வருகிறது,' என்று உள்நாட்டு விவகார மந்திரி பி. என். தத்தார், மக்கள் சபையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

'கழகக்காவலரே! வருக, வருக!'

நாவலர் நெடுஞ்செழியனுக்கு இயக்கக் காளையர் வரவேற்பு

திருச்சி இரயில் சந்திப்பில் கண்கொள்ளாக் காட்சி

மலர்ந்த முகத்துடன், மகிழ்ச்சி தவழும் உள்ளத்துடன் பொதுமக்கள் பொதுச்செயலாளரை வாழ்த்தினர்

(முகவை ஆர். எஸ். பாண்டியன்—நமது தனி நிருபர்)

வள்ளுவர் நகர், மே 16—

திருச்சி சந்திப்பு இரயில் நிலையம் இன்று அதிகாலையில் பெரும் பரபரப்புடன் காணப்பட்டது. பரபரப்பிற்குக் காரணம் இல்லாமல் இல்லை. 'வள்ளுவர் நகரி'ல் நடைபெறவிருக்கும் தி. மு. க. 2-வது மாநில மாநாட்டின் தலைவரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், காலை இரயில் ஒன்றில் திருச்சி வந்து சேர்ந்ததை ஒட்டியே அந்தப் பெரும் பரபரப்பு!

நேற்று இரவே இரயில் மூலமும், தனி பஸ் வண்டிகள் மூலமும் திருச்சி வந்து சேர்ந்துவிட்ட தோழர்கள், இரவெல்லாம் தூங்கியிருக்க நியாயமில்லை என்பதை அவர்கள் தோற்றம் கூறிக்கொண்டிருந்தது. எப்படித் தூங்குவர்? அவர்கள் அதி

(4-ம் பக்கம் பார்க்க)

பணம் பாக்கி: பட்டம் தர முடியாது!

காசி, மே 17—

காசி பல்கலைக் கழகத்தில் பலவகையான தேர்வுகளில் எழுதியுள்ள 266 மாணவர்களுக்குத் தேர்வின் முடிவு அறிவிக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாணவர்கள், பல்கலைக் கழக எல்லைக்குட்பட்ட உணவு விடுதிகள், சிற்றுண்டி விடுதிகள், வெற்றிலைப் பாக்குக் கடைகள் முதலியவற்றுக்குத் தர வேண்டிய பாக்கிப் பணம் 10,000 ரூபாய்க்கு மேல் நிலுவையாகவிட்டபடியால், இப்பணம் கொடுபடும் வரை, தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட மாட்டா என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 17—5—'56 வியாழன்

சொல்லும்—செயலும்!

நாடாளும் பொறுப்பேற்ற தோழர்கள், நம் நாட்டில் சொல்லும் செயலும் ஒன்றிய வழியில் தொண்டாற்றுவதில்லை. அவர்கள் எண்ணுவது ஒன்று-சொல்வது மற்றொன்று—செய்வது வேறாக முடிவதே இதுவரை நாட்டு மக்கள் அவர்களிடம் கண்டிருக்கும் பண்பாடாகும்.

வேறெந்தக் கருத்துமின்றி நாட்டு மக்களின் நன்மைக்காகவே தங்கள் கட்சி உழைத்து வருவதாக இவர்கள் அடிக்கடி கூறிவருகின்றனர்; ஆனால், சொல்லியவற்றில் ஐந்து விழுக்காடும் செயலாற்றவில்லை என்பது தெளிவு.

இன்றுநாடாளும் பொறுப்பு வகிக்கும் காங்கிரசுத் தோழர்கள், இந்த நாட்டில், உரிமைப் போராட்ட கால முதற்கொண்டு சொல்லி வந்தவற்றுள் ஒரு சிலவற்றையேனும் அவர்களால் செயலில் நிகழ்த்த முடிந்ததா?

'அரசாங்க உயர்பதவி ஊழியர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுப்பது இந்தியாவின் நிலைமைக்கு உகந்ததல்ல; ஆதலின், காங்கிரசு அதிகாரம் பெற்றவுடன், அதனைக் குறைத்து, ஒழுங்குபடுத்தும்' என்று சொன்ன சொல்—இன்று அவர்கள் செயலாற்ற முனைந்திருக்கும்போது மறந்துவிட்டதா?

இன்றைய மாநிலக் கவர்னர்கள், அமைச்சர்கள், மேல்அதிகாரிகள் என்போர் மாதந்தோறும் பெறும் மொத்த வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், காங்கிரசுக் கட்சியினரின் போக்கை உணரலாம்.

குளிர் நாட்டில் வாழ்ந்த வெள்ளையர், நம் நாட்டை ஆண்டபோது, கோடை வெப்பம் தாளமுடியாமல் நீலகிரிக்கும், கோடைக்கானலுக்கும், சிம்லாவுக்கும், டார்ஜிலிங்கிற்கும் ஓடிச்சென்றனர் என்றால், இப்போதும், கோடையில் மந்திரிசபை கூடுவதை நீலகிரியில் வைத்துக் கொள்வதற்காக அங்கு ஒரு மாளிகையை விலைபேசி வாங்க முயலும் சென்னை அரசாங்கத்தினர் போக்கை என்னென்பது?

ஏழை மக்கள் கோடிக்கணக்கானவராக இருந்து, வயிற்றுப் பசிதீர வேலை தருவதாயின், கார்ஊற்றிய தெருவில் மூட்டைகள் பல அடுக்கிய வண்டியைக் கடுங்கோடையிலும் நடுப்பகலில் கையால் இழுத்துச் செல்லத் தயாராயிருக்கும் மக்கள் நிறைந்திருக்கும் நம்நாட்டில் 'மக்கள் பிரதிநிதிகள்' என்று தம்மைச் சொல்லிக் கொள்வோர், கூட்டம் கூடிப் பேசுவதற்குக் கோடை வெப்பம் குறுக்கே நிற்பதாகக் கருதி, நீலகிரியில் இடம் பார்ப்பதென்றால், இவர்களை என்னென்பது? இத்தகையவரே ஏழை மக்களின் நலம் நாடுபவராம்! ஏழை பங்காளராம்! தேர்தல் காலத்தில் இவர்களின் கூச்சலைக் கேட்கும் மக்கள் இவர்கள் போக்கைக் கவனிக்காமல் இருத்தலாகாது.

"சனநாயகம் ஒழுங்காக நடைபெற வேண்டுமாயின், அதற்குப் பொதுமக்கள் கருத்துத்தான் அடிப்படையானது. மக்களின் வாக்கைப் பெற்றுப் பதவிக்கு வரும் ஓர் அரசாங்கம், தான் எடுக்கும் நடவடிக்கைகளில் மக்களுடைய கருத்தை ஒட்டியே நடக்க வேண்டும். அடிப்படையான சிக்கல்களில் மக்களின் கருத்தை அது அறிந்துகொள்ள வேண்டும்,"

என்று, இந்தியப் பாராளுமன்ற மக்கள்சபைத் தலைவரான திரு. அனந்தசயனம்பிகார் சட்டசபை உறுப்பினர் சங்க ஆதரவில் நடைபெற்ற விவாத அரங்கில் பேசியபோது கூறினார்.

ஆனால், இன்றைய ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் எவரேனும் மக்கள் கருத்தை மதித்து நடந்துகொள்ளும பண்பு பெற்றிருக்கின்றனரா? இந்தியாவின் பிரதம அமைச்சர் பதவி வகிக்கும் பண்டித நேருவே, 'மக்கள் கருத்துக்கு மண்டியிடுவதா?' எனும் போக்கைக்கொண்டுள்ளார் என்றால், மற்றையோரைப் பற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது? கூறுவதற்கென்ன இருக்கிறது?

தென்னாட்டு மக்கள் கருத்தைக் காற்றில் பறக்கவிட்டுப் பேசிய பிரதம அமைச்சரின் போக்கை நாம் அறியாமல் இல்லை.

தமிழக எல்லை, தேவிகுளம்-பீர்மேடு, தட்சணப் பிரதேசம் முதலியவை பற்றிய பேரொலி தமிழகத்தினின்று எழுந்தபோது—வடவர் பிடியிலிருந்து தமிழகம் விடுபட வேண்டுமென்ற பேரொலி எழுந்தபோது—ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்தோர் செவிடர்களாயினர் எனின், 'சனநாயகத்துக்கு அடிப்படை பொதுமக்கள் கருத்தே' என்று திரு. அனந்தசயனம் கூறுவது சொல்லளவே யொழியக் காங்கிரசுக்காரர்களின் செயலில் இல்லை என்பது விளங்குகின்றது. மக்களின் வாக்கைப் பெற்றுப் பதவிக்கு வந்த காங்கிரசு அரசாங்கம் மக்களுடைய கருத்தை ஒட்டி நடந்துகொள்ள விரும்பவில்லை—நடந்துகொள்ளவில்லை—நடந்துகொள்ளவும் முடியாது.

பம்பாயை மராட்டியர்கள் கோரிச்செய்யும் கிளர்ச்சியைக் காங்கிரசு ஆட்சியினர் எவ்வகையில்மதிக்கின்றனர் என்பதைக் காணுகின்றவர்கள் மக்கள் வாக்கைப் பெற்றுப் பதவிக்கு வந்த காங்கிரசு மக்கள் கருத்தை மதித்து நடந்து கொள்கிறது என்று கூறத் துணிவரோ!

இவ்வகையில், இன்றைய ஆட்சியாளர் ஒரு முறையாவது மக்கள் கருத்தை மதித்து நடந்துகொண்டனர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டேனும தரமுடியாமலிருக்கிறது.

"மதங்களின் அடிப்படையில் கட்சிகள் இருப்பதை நான் எதிர்க்கிறேன்," என்று திரு. அனந்தசயனம் கூறுகிறார்.

'நம் நாட்டு அரசியல் மதச்சார்பற்றது' என்று, அரசியல் சட்டமும் வகுக்கப்பட்டது. ஆயின், பலன் என்ன? சென்னை அரசாங்கச் சின்னம் 'கோவில் கோபுரம்'! இந்திய அரசாங்கம் வெளியிடும் அஞ்சல் முத்திரைகளில் சிவன், பிரமன் போன்ற புராணக் கடவுள்களின் தலைகள், கோவில்களின் படங்கள் முதலியவை; இவை ஏன்? கலையின் பேரால் மதச்சார்பை அரசாங்கத்தில் புகுத்த முயற்சிப்பானேன்? கல்வித்திட்டத்தில், பள்ளிப்பிள்ளைகளின் பாட நூல்களில், இவை போன்ற பிறவற்றில் எல்லாம கவிதையின் பெயரால், இலக்கியத்தின் பெயரால், கலைகளின் பெயரால், மக்கள் உள்ளம மாசு அடைவதற்கேற்றவாறுள்ள மதக்கருத்துக்கள் பல புகுத்தப் பட்டிருப்பானேன்? அரசாங்கம் சொல்வேறு செயல் வேறாக உள்ளதென்பதை அறிந்தே, மத அடிப்படையில் கட்சிகள் வளரவும், மற்றவற்றின் பெயரால் மதக்கருத்துகளைப் புகுத்தவும் மதப்பற்றுடையார் துணிவு பெற்றுவிட்டனர்.

இன்றைய தினம் மத அடிப்படையில் செயலாற்றுவோர் காங்கிரசு வேடமதாங்கியோரே! நாட்டுத் தொண்டு, நாட்டுப்பற்று என்ற சொற்றொடர்களின் போர்வையில் அல்லவா மதப்பற்று வளர்க்கபபட்டு வருகிறது?

எனவே, எத்துறை நோக்கினும காங்கிரசுககாரர்கள், சொல்லலங்காரமாகப் பேசுவதும, அப்பேச்சினால் மக்களை மயக்கிபதவியைப்பெற்று மனமபோல் தன்னல ஆட்சியை நடததுவதுமாக விளங்குகின்றனரேயொழிய, சொன்னதைச் செயலில் நடத்திக் காட்டியதில்லை; நடத்தும ஆற்றல் அவர்களுக்கில்லை.

சனநாயகம், சனநாயகம் என்று கூவித்திரிவதுடன், இச்சொலலைப் பயன்படுத்தித் தன்னலத்தைப் பெருக்கிககொள்வதுடன் காங்கிரசுக்காரர்கள் திருப்தி கொள்கின்றனரே யொழிய, மக்கள் நலம கருதித் தொண்டாற்றும கருத்து, அவர்களிடம் சற்றேனும காணப் படவில்லை.

சனநாயகத்தைச் சொல்லளவில் பேசித் திரிபவர்களின் ஆட்சி அனுபவத்திலிருநது, தமிழகத்தைச் சுரண்டி வடநாடு வாழவும, அதற்குத் தமிழகத்தைக் கருவியாக ஆககவுமான வேலைகளைச் செய்யவே இநதச் சொறகளை அழகாகப் பேசுவதை ஒரு போர்வையாகப் பயன்படுத்தும முறையைக் காங்கிரசுககாரர்கள் தங்கள் செயல் முறையாக ஆக்கிக் கொண்டுள்ளார்கள்.

ஆயின், இந்தியத் துணைக் கணடத்தை ஒன்றாக்கிவிடப் பகற்கனவு காணும பண்டிதரின் கனவைக் கலைத்து, திராவிட மக்களின் விடுதலைக்காக அறவழி நின்று போராடத் திட்டம வகுத்து, தமிழகத்தை மிளிர்ந்து நிறகச் செய்துவரும் நம கழகம், சனநாயக முறையைப் பற்றி வாளளாவப் பேசுவதை விடுத்துச் செயலில் அதை நிறைவேற்றிவருகிறது.நம் கழக அமைப்பே சனநாயக அடிபபடையிலானது என்பதைத் திருச்சி மாநாடு எண்பிக்கும். தேர்தலில் நம் கட்சி கலந்து கொளவதா வேண்டாமா என்பதை நிர்ணயிப்பதற்கு, நம் கட்சித் தலைவர், மக்கள் கருத்தை அறியத் துடிக்கிறார். எப்படி? ஒவ்வொரு பிரதிநிதியும் தம் கருத்தைத் தெரிவிக்கும முறையில, அங்கு 'வாக்கெடுப்பு' நடைபெறுகிறது; மக்கள், தங்கள் கருத்தை அம மாநாட்டில் தாராளமாக எடுத்துரைக்கலாம; எவர் கட்டுப்பாடும அதற்கில்லை.

இமமுறையில் நம் கட்சி செயலளவில் சனநாயக முறையை வளர்த்து, சொல்லுமாறே செயலாற்றும பண்பை மககளிடை வளர்த்து, நம் நாடு எவர் பிடிப்புக்கும, கட்டுப்பாட்டுக்கும, வஞ்சகத்திற்கும, சூழ்ச்சிக்கும அடங்கிக்கிடககாமல் உரிமை பெற்ற நாடாக மிளிரவேண்டுமென்று தொண்டாற்ற வருகிறது. இத்தொண்டில் பங்குகொள்ள நாட்டோரனைவரும திரண்டு வந்து நம முடன சேர்ந்து நின்று பங்குகொள்ள அழைக்கிறோம.

'தி. மு. கழகமே தமிழருக்குத் தக்க வழி காட்டும்'

'மக்களை திரட்டும் ஆற்றல் அதற்குத்தான் உண்டு'

புதுவை 'குரல்' இதழ் தரும் கருத்துரை

"திருச்சியில் மே 17-லிருந்து 20-ந் தேதிவரையில் கூடும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் மாநில மாநாடு, உணர்ச்சி வசப்பட்ட தமிழர்களுக்கு நல்வழி காட்டும் என நம்பலாம்.

"தி. மு. க. ஸ்தாபனத்தில் பல்வேறு சிறப்புகள் இருக்கின்றன. இந்தக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பொதுஜன ஆதரவு பெறவும், மக்கள் பலத்தைத் திரட்டவும் மிகுந்த ஆற்றல் படைத்தவர்கள்.

"தி. மு. க—வினருக்குத்தான் அறிவுக்கேற்ற கருத்துக்கள் இருக்கின்றன. அவர்களுடைய அக்கறை தென்னாட்டைப் பற்றியதாக இருப்பதால், இந்தப் பகுதி மக்களின் நலனைக் காக்க வல்லவர்கள்."

புதுவையிலிருந்து வெளிவரும் 'குரல்' இதழ், 10—5—56-ந்தேதியிட்ட தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது.

அத்தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகள், இங்கு தரப்பட்டுள்ளது:—

"காங்கிரஸ் கட்சியின தலைவர்களிடையே பிளவு; அரை மனத்துடன் எதிர்க் கட்சியாக நின்று பணிபுரிவதாகக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பாலக்காடு மாநாட்டில் முடிவு; பிரஜா-சோஷலிஸ்டுகள் தென்னாட்டு மக்களிடையே பொருள்லலாத சொல்மாறி பொழிந்துகொண்டிருப்பது — இவ்வளவு குழப்பமான நிலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான், தமிழர்களின நலனைககாத்து, அவர்களின் உரிமைகளைப் பெற்று, அவாகளுடைய சுபீட்ச வாழ்வுககு உத்தரவாதம் செய்யும தகுதியும், உறுதியும உடையது.

ஏன், திராவிடம் பிரிய வேண்டும்?

"தி. மு. க. தலைவர்கள் இந்நாட்டை பிரிவினை செய்ய விரும்புகின்றனர் என்றுதான், பிரதமா நேரு, தி. மு. க. மீது ஆத்திரம் கொள்கிறார்.

"பெரிதும வாங்குபவர்களாயிருக்கும் தெற்குநாட்டினர், வடக்கே தொழில பெருக்கத்திறகு ஏன் பணம கொடுத்து உதவவேண்டும்? புது டில்லிககுப் பண உதவி கோரி தென்னிந்தியர்கள் போய்கொண்டிருக்கையில், தபால இலாகா, சுங்க இலாகா, வருமான இலாகா மூலம ஏன் பணததைக கொட்டிக கொடுக்க வேணடும? 'மகா புத்திசாலிகள்' என வடக்கத்தியார் நம்மைத் தட்டிக் கொடுத்து, இந்தப் புத்திசாலிகளுககு 'சப்ராசி' வேலை கொடுத்து ஏன் அவர்களை இழிவுபடுதத வேண்டும்? கிறிஸ்து தோன்றுமுன் கலைவியநாகரீகம படைத்த, தேனினுமினிய மொழியுடைய தமிழர்களை, இந்தி படிக்கும்படி ஏன் வற்புறுதத வேணடும்?

"இந்தக் கேள்விகளை எழுப்புவதில தவறென்ன இருக்கிறது? உண்மையைக் கண்டுதான் பயப்படுகிறாகள் இவர்கள்! இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூற முடியாமலதான இவர்கள் தி. மு. க.-வைத் தாககுகின்றனர்.

"இககேள்விகளை எழுப்புபவர்கள நாணயமானவாகள்; தீர்மானமான அபிப்பிராயங்களை உடையவர்கள்.

"பண்பட்டுப்போன கம்யூனிஸ்டுகளுககு, இககேள்விகளுக்குப் பதிலகூற அவகாசமில்லை. தங்கள் ஸ்தாபனததைச் சுத்தப் படுத்துவதற்கே அவர்களுக்குக் காலம போதாது

"காங்கிரஸ்காரர்கள், மார்வாடி-பணலாவாதேவிக்காரர் மாதிரி இலாபம் நஷ்டம் பார்த்தே ஒரு காரியததில இறங்கும் நிலைககு வந்துவிட்டனர்.

"சோஷலிஸ்டுகளும், பிரஜா-சோஷலிஸ்டுகளும பிரமாதமாக இலட்சியஙகளைப பற்றிப் பேசுவதிலும், அவைகளின் தலைவர்கள் ஒருவருக்கொருவர் முட்டிமுரண்டிக்கொள்வதிலும் காலத்தை வீணாககுகின்றனர்.

"ஆனால, தி. மு. க-வினருக்குத்தான் அறிவுககேற்ற கருத்துக்கள் இருககின்றன.........

திராவிடம் பிரிவதால் தவறென்ன?

"ஒரு டஜன் நாடுகள் பிரிவினையாகி இருப்பது சரித்திரப்பூர்வமான உணமை. அயர் நாடும், அலஸ்டரும், பிரெஞ்சு இந்தோ-சீனாவிலிருந்து 12 நாடுகளும், அவைகளின்மக்களும், கொரியா வடக்கும்—தெற்கும், ஜெர்மனியில் இரு பகுதிகளும், நமக்கு அருகில காஷ்மீரும இதற்குச் சான்றுகளல்லவா?

"இந்தியாவைப் பல்வேறு நாடுகளாகப் பிரித்து, தென் பகுதி அல்லது திராவிட நாட்டை குடியரசாக அமைப்பதில் என்ன பாபம்?

"அறிவாளிகளும், பிரமுகர்களும் சேர்ந்து 'தட்சிணப் பிரதேசம்' அமைத்து, ஆளும் கட்சியிலுள்ள சில 'சோமபேறி'களுக்குப் பதவி தேடித் தருவது நியாயமானால், அதே தட்சிணப் பிரதேச உறுப்புகளைக் குடியரசுகளாக அமைத்து, இந்திய சமஷ்டியில் பிணைப்பது எப்படித் தவறாகும்?

"இவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தி. மு.

(4-ம் பக்கம் பார்க்க)

180 பட்டுத் தொழிற்சாலைகள் கதவடைப்பு

5,000 தொழிலாளர்கள் வேலையிழந்தனர்

பெங்களூர், மே 15—

பெங்களூரில் சுமார் 3,000 தறிகளைக்கொண்ட 180 பட்டுத் தொழிற்சாலைகள் இன்று மூடப்பட்டுவிட்டன. தொழிலாளர்கள் அதிகப்படியான கூலி உயர்வு கேட்டதாலும், அதிகப்படியான வரி விதிக்கப்பட்டிருப்பதாலுமே இத் தொழிற்சாலைகள் மூடப்பட்டனவாம்! தொழிலதிபர்களால், தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற இயலாதாம்.

இதன் காரணமாக நாள் ஒன்றுக்குச் சராசரி ஒரு இலட்ச ரூபாய் மதிப்புள்ள பட்டுத்துணிகளை உற்பத்தி செய்யும் 5000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இத் தொழிற்சாலைகளில் சராசரி ஒவ்வொரு தறியிலும் ஒவ்வொரு பட்டுப்புடவை தயார் செய்யப்பட்டு வந்தது.

விஞ்ஞானத் துறையில் ரஷ்யா முன்னேற்றம்

பொறி இயல் பட்டதாரிகள் தொகை பற்றி ஒரு விளக்கம்

வாஷிங்டன், மே 13—

"ரஷ்யாவில் பயிற்சி பெற்ற எஞ்சினீயர்களின் எண்ணிக்கை 1920-ம் ஆண்டில் 41,000 ஆக இருந்தது; ஆனால், 1954-ம் ஆண்டில் 5 41,000 ஆக உயர்ந்து விட்டது. அதே காலத்தில், அமெரிக்காவில் 2.15,000-த்திலிருந்து 5,00 000 ஆகத்தான் எயர்ந்துள்ளது,"

என்று, அமெரிக்க பாராளுமன்ற அணு சக்திக் குழுவின் ஆராய்ச்சி, முன்னேற்றத் துணைக் குழுவில், அரசாங்க முன்னாள் துணைச் செயலாளர் வில்லியம் பெண்டன் என்பார் தெரிவித்துள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

அவர் மேலும் சொன்னார்:—

ரஷ்ய உயர்தர எஞ்சினீயரிங் கல்வி நிலையங்களிலிருந்து வெளி வந்த பட்டதாரிகளின் எண்ணிக்கை 1950-ம்ஆண்டில் 28,000 ஆக இருந்தது; ஆனால், 1955-ம் ஆண்டில் 63,000 ஆக உயர்ந்தது அதே காலத்தில் அமெரிக்காவில் எஞ்சினீயரிங் பட்டம் பெற்றோரின் எண்ணிக்கை 5,21,000-த்திலிருந்து 23,000 ஆகக் குறைந்தது. "ரஷ்யாவில் ஆண்டில் 1,20 000 பேர் எஞ்சினீயரிங் கல்வியிலும், விஞ்ஞானத்திலும் பட்டம் பெற்றுள்ளனர்; அமெரிக்காவில் 70 000 பேர்தான் பட்டம் பெறுகின்றனர்.

பரம்பிக்குளம் ஆற்று நீர்

சென்னை பயன்படுத்தலாமா

திருவனந்தபுரம், மே 15—

'சென்னை அரசாங்கத்தின் பிரதம எஞ்சினீயர்களும், திரு—கொச்சி அரசாங்கத்தின் பிரதம நீதிபதிகளும் சந்தித்து, பரம்பிக்குளம் ஆற்றின் தண்ணீரைப் பயன்படுத்துவது குறித்து ஆலோசனை செய்யலாம்' என்று சென்னை அரசாங்கம் கூறிய யோசனையைத் திரு—கொச்சி அரசாங்கம் ஏற்றுக் கொண்டதாகத் தெரிய வருகிறது.

திரு—கொச்சியின் நலத்தைப் பாதிக்காத வகையில், பரம்பிக்குளம் நதியின் நீரை சென்னை பயன்படுத்திக் கொள்ளலாமா என்பதுபற்றி இரு அரசாங்கங்களின் பிரதம எஞ்சினீயர்களும் ஆலோசனை நடத்துவார்கள். இது சம்பந்தமாக அரசாங்க ரீதியில்தான் முடிவு செய்யப்படும்.

பரம்பிக்குளம் ஆறு சென்னை மாநிலத்தில் உற்பத்தியாகி, திரு—கொச்சியில் பாய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பீகார் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லா தீர்மானம்

தீர்மானம் தோல்வியுற்றது

பீகார் சட்டசபையில், பீகார் மந்திரிசபையின் மீது நம்பிக்கையில்லை என்று பிரஜா சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு ராமானந்த தேவாரி என்பவர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியுற்றது. தீர்மானத்தை எதிர்த்து 187 உறுப்பினரும், ஆதரித்து 59 உறுப்பினரும் ஓட்டு அளித்தனர்.

மக்கள் கூட்டம் மிகுதியாக உள்ளதாம்

தினசரி 'ஜனதா எக்ஸ்பிரஸ்' புறப்படத் திட்டமாம்!

புதுடில்லி, மே 16—

இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்திலிருந்து, சென்னை—டில்லி ஜனதா எக்ஸ்பிரஸ் வண்டி, தினந்தோறும் சென்னையிலிருந்து புறப்படுவதற்கான ஏற்பாடு செய்ய எண்ணமிருப்பதால், இந்திய அரசாங்க இரயில்வே உதவியமைச்சர் திரு. அழகேசன் கூறினார் இந்தப் பாதையில் மக்கள் கூட்டம் மிகுதியாயிருப்பதால், இப்போதுள்ள முறை போதியதாக இல்லை.

காவலிலிருந்த மக்கள் சபை உறுப்பினர் விடுதலை

பம்பாய், மே 15—

தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ்க் காவலில் வைக்கப்பட்டிருந்த திரு. ராஜாராம் என்றழைக்கப்படும் பாவு சாஹேப் ராட் என்பவர் பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதிகளால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ராஜாராம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராவர்; பம்பாய் சட்டசபையின் உறுப்பினராகப் பல ஆண்டுகள் இருந்தவர்.

காவலில் வைக்கப்படுவதற்குக் கூறப்படும் காரணங்களில் ஒன்று தெளிவாக இல்லாததாலேயே நீதிபதிகள் அவரை விடுதலை செய்ததாகக் கூறினர்.

16 கதிர் நூற்பு இயந்திரம்

சோதனைக்காக 100இயந்திரங்கள் இயக்கப்படும்

சென்னை, மே 15—

கோயம்புத்தூர் டெக்ஸ்டூல் கம்பெனி புதிதாகக் கண்டுபிடித்துள்ள 16 கதிர்கள் கொண்ட நெசவு இயந்திரத்தைச் சோதித்துப் பார்ப்பதற்கென சென்னை அரசாங்கம் விரைவில் ஒரு திட்டத்தை மேற்கொள்ளக்கூடும் எனத் தெரிகிறது.

இத்திட்டத்தின்படி கைத்தறி நெசவுத் தொழில் பெருவாரியாக நடைபெறும் பகுதிகளில் 100 இயந்திரங்கள் இயக்கப்படும். இச் சோதனைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சுமார் ரூ 5 இலட்சம் செலவாகலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

100 இயந்திரங்களில் 50 இயந்திரங்களை விசையின் துணை கொண்டும், எஞ்சிய 50 இயந்திரங்களைக் கையினாலும் இயக்கிப் பார்த்துச் சோதனை செய்யப்படும்.

ஒவ்வொரு இயந்திரத்தையும் இயக்க இருவர் தேவைப்படுவர். இவர்கள் ஒவ்வொருவரும் எட்டு மணி நேரம் வேலை செய்தால் நாள் ஒன்றுக்கு ரூ. 2 சம்பாதிக்கலாமாம். இவ்வியந்திரம் ஒவ்வொன்றின் விலையும் ரூ. 1000 தானாம்!

இப்போது உள்ள நெசவாளர்கள், 'கிசான் சர்க்கா'வைப் பயன்படுத்துகின்றனர்.

இவர்கள், 'கிசான் சர்க்கா'வை விட்டுவிட்டு, அம்பர் சர்க்காவைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறும் எண்ணம் சென்னை அரசாங்கத்திற்குக் கிடையாது.

'அம்பர் சர்க்கா'வை பயன்படுத்தப்படுமாறு செய்யப்பட்டாலும் 'கிசான் சர்க்கா'வைக் கைவிடுமாறு செய்யும் யோசனை கிடையாது. இரண்டும் பயன்படுத்தப்படும்படி ஊக்கம் அளிக்கப்படும்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டச் செலவினங்கள்

நடைமுறைகள் மீது ஒரு கண்ணோட்டம்!

புதுடில்லி, மே 15—

கடந்த பிப்ரவரி மாதத்தில் அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின்போது வெளியிடப்பட்ட இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் திட்டம், பெரும்பாலும் அப்படியே நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்றும், ஒருசில சிறு மாற்றங்களே அதில் ஏற்பட்டுள்ளன என்றும் பிரதமர் நேரு மத்திய அரசாங்கத்தின் இரண்டு சபைகளிலும் வெளியிட்டுள்ளார்.

இறுதியான திட்டத்தில், நகல் திட்டத்தில் கண்டபடியே, அரசாங்கம் செலவு செய்வதற்கென ரூ. 4,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட தொழிலதிபர் ரூ 2,400 கோடி செலவில் தொழில்களை அபிவிருத்தி செய்ய வசதி செய்துகொடுக்கப்படும்.

அரசாங்கம் ஒதுக்கியுள்ள ரூ. 4,800 கோடி கீழ்க்காணுமாறு செலவிடப்படும்:—

போக்கு-வரத்து தபால்	ரூ. 1,385 கோடி
சமுதாய சேவை	,, 945 ,,
விவசாயம்	568
நீர்ப்பாசனம், மின்சாரம்	913
தொழிற்சாலை, சுரங்கத் தொழில்	890
பல்வேறு வகையான காரியங்கள்	99

இதில் சென்னை மாநிலத்திற்கு ரூ. 173 கோடிதான் செலவிடப்படும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்குப் பொதுமக்களும் பங்கு கொண்டு ஒத்துழைக்க வேண்டுமென்று பண்டித நேரு கேட்டுக் கொண்டார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையில் நிறைவேற்றப்படுகையில், அவ்வப்போது அதைப் பரிசீலனை செய்து சரி செய்துகொள்ளப்படும் என்றும், தேவைப்படுமானால் திட்டத்தை நிறைவேற்றும் காலத்தை ஐந்தாண்டுக் காலத்திற்கு மேலும் நீடிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசியல் மொழிப் பிரச்சினை

முடிவு பாதகமாயின் உரிமைப்போர் தொடங்குவர்?

கொழும்பு, மே 15—

இலங்கையில் அரசியல் மொழியாக சிங்களம் மட்டுமே இருப்பதைத் தடுப்பதற்கு, பிரிட்டிஷ் அரசியாரின் தலையீட்டைக் கோருவதற்கு, இலங்கைப் பாராளுமன்றத்திலுள்ள தமிழ் உறுப்பினர் சி. சுந்தரலிங்கம் இலண்டன் செல்ல தீர்மானித்துள்ளார் எனத் தெரிகிறது. தனது கருத்தை தமிழ்ப்பகுதிகளிலுள்ள மற்றைய உறுப்பினர்களிடமும் தெரிவித்து இலண்டன் வருமாறு அவர் அழைத்துள்ளாராம்.

இலங்கை பாராளுமன்றத்தின் தமிழர் எதிர்ப்பு முன்னணியின் ஒரே பிரதிநிதியான சுந்தரலிங்கம், சிங்களத்தை மட்டுமே அரசியல் மொழியாக்குவதென்ற முடிவை இலங்கை அரசியலார் தொடர்ந்து நடத்துவார்களானால், தமிழ் மக்கள் உரிமைப்போர் தொடுப்பர் என்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

உலகத்தோர் கற்க வேண்டியன

ஜினீவா, மே 14—

உலக மருத்துவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பல அம்சங்கள் ஆயுர்வேத முறையில் இருப்பதாக, இலங்கையின் சுகாதார அமைச்சர் திருமதி விமலா விஜயவர்த்தன, இங்கு நடைபெறும் உலகச் சுகாதார அசெம்பிளியில் குறிப்பிட்டுள்ளார்.

மாநாட்டில் கலந்துகொள்வதற்கு லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னுலாவது புதிய மந்திரிகள் நியமனம் பற்றி அதிகார பூர்வமாக அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டில்லி ஆட்சிப்பீடம் விரிவடையுமாம்

தென்னாட்டிலிருந்து இரண்டு புதிய மந்திரிகள்

புதுடில்லி, மே 14—

மத்திய ஆட்சிப்பீடத்தில் புதிய மந்திரிகள் சிலர் நியமிக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால் இச்செய்தி இன்னும் உறுதிப்படவில்லை.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுகையில் ஏற்படக்கூடிய அதிகப்படியான வேலைகளைக் கவனிப்பதற்காகவே புதிய மந்திரிகள் நியமிக்கப்படுவர் எனத் தெரிய வருகிறது.

புதிய மந்திரிகளாக நியமிக்கப்படுவோர்களில் இருவர் தென்னிந்தியர்களாக விருக்கக்கூடுமென்றும் இவர்களில் ஒருவர் ஆந்திராவிலிருந்தும், மற்றவர் கேரளத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படலாம் என்றும் பேசப்படுகிறது.

இப்போது புதுடில்லியில் நடைபெறும் பாராளுமன்றக் கூட்டம் முடிவிலாவது, பிரதமர் நேரு காமன்வெல்த் பிரதம மந்திரிகள்

****

தலைமைக் கழகம்: அறிக்கை—7/56

பொதுத் தேர்தல் குறித்து வாக்கெடுப்பு

பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொண்டு போட்டியிட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து, மாநில மாநாட்டிற்கு வருகை தருவோரின் பொதுவான கருத்தை அறியும் வாக்கெடுப்பு முறை, 19—5—56 சனியன்று காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் நடைபெறும். நுழைவுச் சீட்டு உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமைச் சீட்டு தரப்படும்.

தி. மு. கழகம்
பொதுத் தேர்தலில் போட்டியிட

வேண்டு	
வேண்டாம்	

இப்படி அமையும் சீட்டில் அவரவர் விருப்பத்திற்கிணங்க எதிரிலுள்ள கட்டத்தில் X அடையாளம் இட வேண்டும்.

மாநாட்டுப் பந்தலில் தனியே வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் வாக்குரிமைச் சீட்டைப் போட வேண்டும்.

'அறிவகம்,'
சென்னை—13
2—1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

'இந்தியைக் கட்டாயமாகக் கற்கக் கூறுவது மாறுபாடு-தகராறை உண்டாக்கும்'

'கல்வித்தர உயர்வுக்கு ஆங்கிலம் தேவை'

பல்கலைக் கழகத் துணைவேந்தர் கருத்துரை

செங்கற்பட்டு, மே 15—

"இந்நாட்டின் கல்வித்தரத்தைப் பொதுவாக உயர்த்துவதற்கு, அனைத்துலக மொழியாகிய ஆங்கிலத்தைக் கட்டாயமாகக் கற்க வேண்டியது இன்றியமையாததாகும். நம் நாட்டுப் பாடத் திட்டத்தில் இடைநிலைப்பள்ளித் தொடக்க வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவே இருத்தல் வேண்டும் என்பதை இப்போது மக்கள் படிப்படியாக உணரத் தலைப்பட்டுள்ளனர். இந்திய தேசிய வாழ்க்கையில் ஆங்கிலம் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆங்கிலத்தினால் நாம் குறிப்பிடத்தக்க பயன்களைப் பெற்றுள்ளோம். ஆங்கிலக் கல்வி தாய்மொழியை வளர்ச்சியடையச் செய்யும்,"

என்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி அவர்கள் நேற்று செங்கற்பட்டில் நடைபெற்ற சென்னை மாநில 46-வது கல்வி மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசினார்.

அவர் இந்தி மொழி குறித்துப் பேசுகையில், இடைநிலைப் பள்ளித் தொடக்க வகுப்பிலேயே இந்தியைக் கட்டாய பாடமாக்குவது அறிவுடைமையாகுமா என்பது தமக்குத் தெரியாதென்றும், இந்தி மொழி விருப்பமான பாடமாகக் கற்பிக்கப்பட்டால் காலப்போக்கில் பலன் கிட்டக்கூடும் என்றும், இந்தியைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்பது மாறுபாட்டையும் தகராறையும் உண்டாக்கக்கூடும் என்றும் குறிப்பிட்டார்.

ஆசிரியர்களின் நிலை உயர வேண்டுமென்றும் அவர் கூறினார்.

மாநில மாநாட்டுத் தலைவருக்கு திருச்சி நகரசபை வரவேற்பு

ஜனநாயகப் பண்பு அரும்புவது கண்டு பொதுச்செயலாளர் மகிழ்ச்சி

திருச்சி, மே 16—

திருச்சி நகரசபையினர், இன்று மாலை 5-30 மணியளவில் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டுத் தலைவரும், கழகப் பொதுச் செயலாளருமான இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளித்தனர்.

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் நகரசபை வாயிலை அடைந்ததும், அங்குக் குழுமியிருந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் கழகத்தையும், பொதுச்செயலாளரையும் வாழ்த்தி, ஒலிமுழக்கமிட்டனர்.

பொதுச்செயலாளரை, மன்ற வாயிலில், நகரசபைத் தலைவர் டாக்டர் மதுரம் அவர்கள் வரவேற்றார்.

நகர மன்ற மண்டபத்தில் வரவேற்பு வைபவம் கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழாவை ஒட்டி, மன்ற அலுவலகமும், மண்டபமும் சிறப்புற அலங்கரிக்கப்பட்டிருந்தன. மண்டபத்தின் உள்ளும் புறமும் நூற்றுக்கணக்கானோர் கூடி நின்றிருந்து வைபவத்தைக் கண்ணுற்றனர்.

மன்றச் சார்பில் மாநாட்டுத் தலைவருக்கு, டாக்டர் மதுரம் ஓர் நல்வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

பின்னர், நெடுஞ்செழியன் அவர்கள், தமக்கு திருச்சி நகரசபையினர் அளித்த நல்ல வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அரியதோர் கருத்துரை வழங்கினர்.

மாற்றுக் கட்சியினரையும் வரவேற்கும் நல்ல ஜனநாயகப் பண்பு சிறிது சிறிதாகவேனும் நாட்டில் அரும்பி வருவது கண்டு மகிழ்ச்சி தெரிவித்து, இந்த அரும்பு மலர்ந்து, நல்ல ஜனநாயக மணம் கமழவேண்டுமென்றார் பொதுச் செயலாளர்.

பின்னர், நகரசபைத் துணைத் தலைவர், பொன்னுசாமி அவர்கள் நன்றி நவில, விழா இனிது முடிவுற்றது.

இறுதியில் பொதுச்செயலாளருக்கு, நகர மன்ற உறுப்பினர்களும், அலுவலர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

சிறிது நேரம் அவர்களுடன் அளவளாவிவிட்டு, பொதுச் செயலாளர் 'வள்ளுவர் நகர்' நோக்கி விரைந்தார்.

சென்னைக்குப் புதிய கவர்னர் யார்?

மீண்டும் வடநாட்டை சேர்ந்தவரே நியமிக்கப்படுவாரா?

உதகை, மே 16—

இப்போதுசென்னைமாநிலத்தின் கவர்னராக இருக்கும் பிரகாசா அவர்களின் ஐந்தாண்டுப் பதவிக்காலம் இவ்வாண்டின் இறுதியோடு முடிவடைகிறது. எனவே அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் புதிய கவர்னர் நியமிக்கப்பட வேண்டும்.

சவுராஷ்டிர மாநிலத்தின் இராஜப் பிரமுகராகவிருக்கும் நவநகர் ஜாம்சாகேப் சென்னை மாநிலத்தின் புதிய கவர்னராக நியமிக்கப்படலாம் எனப் பேசப்படுகிறதாம்.

ஜாம்சாகேப் இப்போது உதகையில் தங்கியுள்ளார். அங்கு இவருக்கு ஒரு பெரிய அரண்மனை உள்ளது. ஆண்டுதோறும் இவர் இவ்வரண்மனையில் கோடைக் காலத்தில் வந்து தங்குவது வழக்கம்.

சென்ற ஆண்டு இவர் உதகைக்கு வந்தபோது கோயம்புத்தூர் நகரசபை இவருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தது. ஒரு பிரசவ விடுதியையும் இவர் அப்போது திறந்துவைத்தார். இவருக்கு விளையாட்டுகளில் பெரும் விருப்பம் உண்டு எனத் தெரிகிறது.

அபாயம் ஏற்படு முன்பே முன்னெச்சரிக்கை

"அணுகுண்டு, நீர்வளிக் குண்டு பரிசோதனைகளின் அணுக் கதிரியக்கத்தால் காற்று மண்டலம் ஆபத்திற்குள்ளாவதைத் தடுத்தாக வேண்டும்; அணுக்கழிவுப் பொருள்களினாலோ அணுச் சக்திப் பொருள்களினாலோ கடல் நீர் கெட்டு நஞ்சாகிவிடுவதையும் தடுக்க வேண்டும்," என்று, ஐ. நா. வுக்கு சிபாரிசு செய்ய சர்வதேச சட்டக் குழு தீர்மானித்துள்ளது.

மிகப்பெரிய கடல்கள் மீது உலக நாடுகளின் உரிமைகள் பற்றிய திட்டங்களை இக்குழு தீட்டி வருகிறதாம்.

கழகக் காவலரே! வருக! வருக!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலையில் பொதுச்செயலாளருக்குத் தரப்படும் வரவேற்பைக் காணவேண்டும் என்ற உள்ளத் துடிப்பிற்கு ஆளாகிவிட்டவர்களாயிற்றே!

காலை மலர்ந்ததும், கதிரவன் தனது கூரிய ஒளிக் கதிர்களால் வையத்தைப் பிளந்துகொண்டிருந்தான். அந்த இளம் வெயில் ஏற்கனவே கவர்ச்சி மிகுந்த திருச்சி சந்திப்பு இரயில் நிலையக் கட்டிடத்தை மேலும் சோபிதமாக்கிக் கொண்டிருந்தது. 'இரயில் எப்போது வரும்' என்ற ஆவலால் உந்தப்பட்ட தோழர்கள் பெருவாரியாக, இரயில் நிலையத்திற்கு உள்ளும் புறமும் கூடிவிட்டனர். அவர்கள் கண்களில் களிப்பும், பெருமிதமும் ஒளிவிசிக் கொண்டிருந்தன. நேரம் ஆக ஆக அவர்கள் ஏறு தங்கள் ஆவலை அப்படி வெளிக்காட்டிக் கொண்டிருந்தார்கள்.

காலை சுமார் 6-45 மணிக்கு தூத்துக்குடி துரித வண்டியும் இரயிலடி வந்து சேர்ந்தது—நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே! அந்த வண்டியில் அன்று பிரயாணம் செய்த மிகப் பெரும்பான்மையோர், கழகத் தோழர்களும், மாநாட்டில் பங்குபெற வந்தோரும்தான். சென்னையிலிருந்து ஒவ்வொரு இரயில் நிலையத்திலும் இலட்சிய முழக்கமிட்டுக் கொண்டே வந்த அவர்கள், பொதுச்செயலாளரை இரயிலடியில் வரவேற்க, இந்த அதிகாலையில் அத்தனை பெரிய மக்கள் கூட்டம் கூடியிருக்குமென எண்ணவில்லைதான்.

மாநாட்டுத் தலைவர் இரா. நெடுஞ்செழியன், திறப்பாளர் ஜி பி. சோமசுந்தரம், கலை கண்காட்சித் திறப்பாளர் என். வி. நடராசன் ஆகியோர், இரயிலை விட்டு இறங்கியதும், கூடியிருந்த பெருவ கூட்டம் எழுப்பிய இலட்சிய ஒலி முழக்கம், வாழ்த்துக்கள் வானைப் பிளந்தன! தோழர்களின் உற்சாகமும் மகிழ்ச்சியும் கரைபுரண்டோடின!

வரவேற்புக் குழுத் தலைவர் அன்பில்-தருமலிங்கம் மாநாட்டுச் செயலாளர்கள் மணி, முத்து, மற்றும் தோழர்கள் பராங்குசம், தொண்டர் படைத் தலைவர் ஐ எம். ஷரீப் முதலானோர் கூடி நின்று, மாநாட்டுத் தலைவரையும், இதரரையும் மலர் மாலைகள் சூட்டி வரவேற்றனர்.

மாநாட்டுத் தலைவருக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளின் எண்ணிக்கை மிகுதி, அவரைத் திணறவைத்துவிட்டது. அவர், இரயில் நிலையத்திற்குள்ளிருந்து, வெளிவருவதற்குள் போதும்போதும் எனருகிவிட்டது. வெளியே வந்ததும், அங்கே, தலைவரைக் காணக் கூடியிருந்த கூட்டம், 'மாநாட்டுத் தலைவரே! கழகக் காவலரே, வருக வருக!' 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற வாழ்த்தொலிகளையும் இலட்சிய முழக்கங்களையும் எழுப்பி தங்கள் ஆவலைப் பூர்த்தி செய்து கொண்டதுடன் கழகத்தின் மீது கொண்டுள்ள நீங்காப் பற்றையும், ஆர்வத்தையும் காட்டிக்கொண்டனர்.

தொண்டர் படையின் ஒரு பகுதியும் இரயில் நிலையத்திற்கு வந்து, தலைவரை வரவேற்கும் நிகழ்ச்சியில் பங்கு பெற்றுச் சிறப்புற்றது.

மலர்ந்த முகத்தோடு, மகிழ்ச்சி ததும்பும் உள்ளத்தோடு, கூடியிருந்த பொதுமக்கள், பொதுச் செயலாளரை வாழ்த்தி வரவேற்று, கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள 'வள்ளுவர் நகருக்கு' அனுப்பிவைத்தனர்.

'வள்ளுவர் நகரி'ல் ஆமைக்குன்ற தர்மாவின் தலைமை நிலையம் சென்று, அங்கிருந்த அண்ணா முதலியோரைச் சந்தித்துவிட்டு, பொதுச்செயலாளர் அவர்கள், செயற்குழுக் கூட்டம் நடைபெறும 'முனிசிபல' சத்திரத்திற்கு விரைந்தார்; அவருடன இதர செயற்குழு உறுப்பினரும் சென்றனர்.

காலை 8 மணி முதல் 11 மணி வரை, செயற்குழுவினர், 2வது மாநில மாநாட்டிற்கான தீர்மானங்களைக் குறித்து விவாதித்தனர்.

தீர்மானக்குழுவினர் ஆய்ந்து பொறுக்கி எடுத்து தந்திருந்த தீர்மானங்களைப பரிசிலித்து, பொதுக்குழுவிற்கு அனுப்பத் தந்தனர், அவர்கள்.

சிறிது நேர இடைவெளியும் இன்றி, தி. மு. கழகக் கொள்கை வகுக்கும் குழுவான பொதுக்குழுக் கூட்டம் சுமார் 11-10 மணிக்கு துவங்கிற்று.

அப்பொழுது முதல் மாலை 5 மணி வரை—பகல் உணவுக்காக 1-30 முதல் 2 மணி வரையுள்ள அரை மணி நேரம் போக—கழகச் சட்டதிட்டங்கள் குறித்தும், மாநில மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்தும் பொதுக்குழு விவாதித்து முடிவுகளை மேற்கொண்டது.

பின்னர், மாலை 5-10 மணியளவில், மாநாட்டுத் தலைவரும், பொதுச்செயலாளருமான இரா நெடுஞ்செழியன் அவர்கள் நகரசபையினர் தந்த வரவேற்பைப் பெற்றுக்கொள்ளப் புறப்பட்டார்.

தி. மு. க. 2-வது மாநில மாநாடு

18—5—56 வெள்ளி—நிகழ்ச்சி நிரல்:

★

காலை 7-30 } — பிரதிநிதிகள்
,, 8-30 } கூட்டம்
,, 9-00—இன்னிசைஅரங்கு இசைமுரசு அனீபா.
,, 10-00— இசைச்செல்வி ஜி.கஸ்தூரி
,, 11-00 — துவக்கவுரை: தோழர் ஜி. பி. சோமசுந்தரம்.
,, 12-00 — வரவேற்புரை: தோழர் அ. பெ. தருமலிங்கம்.
பகல் 1-00 } — இடைவேளை
மாலை 3-00 }
,, 3-00-இன்னிசைஅரங்கு: தென்காசி முத்துசாமி.
மாலை 3-30—இசைக் குயில் பி. எஸ் செல்வா.
,, 4-30—தலைவரை முன் மொழிதல்.
,, 4-45—வழி மொழிதல்
,, 6-00-தலைவர்முன்னுரை: இரா. நெடுஞ்செழியன்
இரவு 8-00 } - இடைவேளை
,, 9-00 }
,, 9-00—உடற்பயிற்சி: பொன்னு உடற் பயிற்சிக் கழகத்தார்.
,, 10-00—'மணி மகுடம்' நாடகம்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

குடிசைப் பகுதிகள் சீர்திருத்தப்படும்?

ரூ. 20கோடி ஒதுக்கப்படும்?

புதுடில்லி, மே 16—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஒதுக்கப்பட்ட குடிசைப் பகுதிகளைச் சீர்திருத்தியமைக்கவும், நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்வதற்கும் என 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படலாம் என திட்டக் கமிஷன் சிபாரிசு செய்துள்ளது.

மலேயா தமிழருக்கு

மரண தண்டனை ரத்து

லண்டன், மே 16—

தென்னாட்டைச் சேர்ந்த மலேயா வாழ் தமிழரான சுப்பிரமணியம் என்பவருக்கு, மலேயா நெருக்கடி காலச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை 'பிரிவி கவுன்சில்' ரத்து செய்துள்ளது.

தீய வழக்கத்தை ஒழிக்க நடவடிக்கை

இலங்கை அரசாங்கத்தின்முயற்சி

கொழும்பு, மே 16—

'இலங்கை அரசாங்கம், குதிரைப் பந்தயங்கள் குறித்து வானொலியில் விமர்சனம் செய்வதைத் தடை செய்யும் குதிரைப் பந்தயத்தில் மக்கள் பணத்தைப் பணயமாகக் கட்டும் வழக்கத்தை ஒழிப்பதற்கு முதல் நடவடிக்கையாக இது செய்யப்படுகிறது,'' என்று இலங்கை உள்நாட்டு மந்திரி ஏ. பி. ஜெயசூரியா அறிவித்துள்ளார்.

குதிரைப் பந்தய விமர்சனங்களைத் தாங்கிவரும் உள்நாட்டுப் பத்திரிகைகளையும், வெளிநாட்டுப் பத்திரிகைகளையும் தடை செய்யவும் அரசாங்கம் சிந்தித்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாநில மாநாட்டில் கிடைக்கும்!
பேராசிரியர் க. அன்பழகன்
அளிக்கும் அரசியல் விருந்து!
'உரிமை வாழ்வு'
விலை ரூ. 1—8—0
★
தோழர் இராதாமணாளன்
படைக்கும் சிறுகதைச் செல்வம்!
'பூக்குடலை'
விலை ரூ. 2—0—0
★
கிடைக்குமிடம்:
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1

தி. மு. கழகமே...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

க. நிலைத்துத் தானிருக்கப் போகிறது. மே மாதம் திருச்சியில் நடக்கப்போகிற அவர்கள் மாநில மாநாடு மூலம், அது, அதிகப்படியான பொதுஜன ஆதரவு பெறப்போகிறது. இதன் மூலம், புதுடில்லிக்குச் சமதையான சீரும் சிறப்பும் உள்ள குடியரசு தோன்றும்— ஆட்சியினர் இன்முகத்துடன் இணங்கினால்!

'இராஜ தந்திரமறியாது, கோரிக்கையை நிராகரிப்பார்களானால் செங்கோட்டையிலுள்ள ஆட்சியினர் அஸ்திவாரம் கலங்கும்படியான நிகழ்ச்சிகள் நடைபெறும்.''

துறைமுகமே ஆட்டங் கொடுத்ததாம்!

பிரிட்டனின் புது அணு ஆயுதச் சோதனை

ஆன்ஸ்லோ, (மேற்கு ஆஸ்திரேலியா) மே 16—

மக்கள் நடமாட்டமற்றதும், நெடுந்தொலைவிலுள்ளதுமான மாண்டி பெல்லோ தீவுகளில் பிரிட்டனின் புதிய அணு ஆயுதமொன்று வெடிக்கப்பட்ட 7 நிமிடத்திற்குள்ளாக, வானைப்பிளப்பதுபோன்ற பயங்கர ஒலிக்குமுறல் 100 மைலுக்கு அப்பாலுள்ள ஆன்ஸ்லோவில் கேட்டதாம் இப்பயங்கர இடியோசையினால் துறைமுகம் ஆட்டங்கொடுத்ததாம்.

இதுபிரிட்டன் வெடித்துப்பார்க்கும் மூன்றாவது அணுஆயுதமாகும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

18-5-56 மாலை 6-30 மணிக்கு, சென்னை—வண்ணை இளங்கோ கலைமன்றச் சார்பில், தோழர் க. கணேசன் தலைமையில், 'கனித் தமிழ் வளர்த்த தமிழர்கள்' என்ற பொருள் பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னைத் திருவள்ளுவர் கழகம் 13-ம் ஆண்டு நிறைவு விழா

19—5—56 மாலை 6 மணியளவில், புரசைபாக்கம் பெரியசாலையிலுள்ள அன்னதான சமாஜ மண்டபத்தில், திரு. கே. சோமசுந்தரனார் தலைமையில், திரு. அ. கி. பரந்தாமனார், திருமதி தி. சே. கமலா ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.